**செய்தி வெளியீடு எண்: 747** **நாள்: 16.10.2018**

**சென்னை, நேரு உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அரசின் வேலைவாய்ப்பில் 2% வரை உள்ஒதுக்கீடு அறிவித்ததையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விளையாட்டுச் சங்கங்களின் சார்பில் பாராட்டு விழா மற்றும் தேசிய பள்ளிக்குழும விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு காசோலை வழங்கும் விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் விழாப் பேருரை –16.10.2018**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த இனிய விழாவில் சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
**அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே !**

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்துக் கொண்டிருக்கிற
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்
**மரியாதைக்குரிய திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!**

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும்
நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர்
**அண்ணன் திரு. டி.ஜெயகுமார் அவர்களே!**

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
**அண்ணன் திரு. கே.பி.அன்பழகன் அவர்களே!**

தலைமையுரை ஆற்றிய
மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
**சகோதரர் திரு. பா.பாலகிருஷ்ணா ரெட்டி அவர்களே!**

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற
தலைமைச் செயலாளர் **முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப.,**அவர்களே,

வருகை புரிந்துள்ள மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே, வருகை புரிந்துள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே!
முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு வரவேற்புரை ஆற்றிய
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு முதன்மை செயலாளர் **திரு. தீரஜ்குமார் அவர்களே!**

நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர்
**திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர்** அவர்களே!

பாராட்டுரை வழங்கிய
தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர்
**திரு. என்.ராமச்சந்திரன் அவர்களே !**

தமிழ்நாடு தடகள சங்கத் தலைவர்
**திரு. டபிள்யூ.ஐ.தேவாரம் அவர்களே !**
தமிழ்நாடு கூடைப்பந்து கழகத்தின் நிர்வாகி
**திரு. ராஜ் சத்யன் அவர்களே !**

தமிழ்நாடு சிலம்பாட்ட சங்கத்தின் தலைமை ஆலோசகர்
**திரு. எம்.அமானுல்லா அவர்களே !**

தமிழ்நாடு டேக்வோண்டா கழகத்தின் தலைவர்
**திரு. ஐசரி கணேசன் அவர்களே !**

சதுரங்க விளையாட்டின் கிராண்ட் மாஸ்டராக விளங்கிக் கொண்டிருக்கின்ற
**மரியாதைக்குரிய திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்களே !**

ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டு வீரர்
**மரியாதைக்குரிய திரு. பாஸ்கரன் அவர்களே !**

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அனைத்து விளையாட்டு சங்கங்களின் நிர்வாகிகளே!

**சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு**
**இந்தியாவிற்கு பெருமை சேர்த்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளே!**

**சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற பயிற்சியாளர்களே, அர்ஜுனா விருது பெற்றிருக்கின்ற வீரர்களே, வீராங்கனைகளே!**

பெருந்திரளாக இங்கு கூடியிருக்கும்
வருங்கால நம்பிக்கை நட்சத்திரங்களான பரிசு பெற்றிருக்கின்ற

விளையாட்டு வீரர்களே, வீராங்கனைகளே,
இளைஞர்களே! பெரியோர்களே, தாய்மார்களே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!
உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அனைத்து விளையாட்டு
சங்கங்களின் சார்பில் தமிழ்நாடு அரசு அல்லது
தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களில்,
குறிப்பிட்ட பதவிகளில், தகுதியின் அடிப்படையில்
விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு
2 விழுக்காடு வரை உள் ஒதுக்கீடு வழங்கியமைக்காக நன்றி தெரிவித்தல்
மற்றும் தேசிய பள்ளிக்குழு விளையாட்டுப் போட்டிகளில்
வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு
காசோலை வழங்கும் இந்த விழாவில்
கலந்து கொள்வதில் நான்
மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இளைஞர்களுக்கு படிப்பும், விளையாட்டும்
இரண்டு கண்களாகும். படிப்பு – அறிவை
வளர்ப்பது போல, விளையாட்டு உடலை
பேணிக் காத்து, மன உறுதியையும், அறிவாற்றலையும் வளர்க்கும் என்பதை
உணர்ந்து கல்வி, விளையாட்டு என்ற இரண்டிலும் மாணவர்கள் கவனம்
செலுத்த வேண்டியது அவசியம் ஆகும்.

இதன் மூலம் அறிவுசார்ந்த, ஆரோக்கிய
இளைய சமுதாயம் உருவாகும்.
எனவே, இளைஞர்கள் கணினி மற்றும்
கைப்பேசியில் விளையாடுவதை தவிர்த்து,
உடல் உழைப்பை அதிகரிக்கும் விளையாட்டுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

விளையாட்டுகள் மூலம் தோழமை, ஒற்றுமை,
மற்றும் ஒழுக்கம் ஆகியவை வளர்வதுடன்,
தலைமை பண்பும், இலக்கு நோக்கிய பயணமும்
ஏற்பட வழிவகை ஏற்படுகிறது.

விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து
தனியார், அரசு
மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மற்றும்

கல்லூரிகளில் ஆண்டுதோறும்
விளையாட்டு தின விழா கொண்டாடப்படுகிறது.
இந்தப் போட்டிகளில் வெற்றி பெறுவோர் பரிசுகள் வழங்கி
ஊக்குவிக்கப்படுகின்றனர்.
இந்த ஊக்கம், அவர்கள் அடுத்த கட்ட போட்டிகளில்
பங்கு பெறுவதற்கு ஒரு உத்வேகமாக அமைகிறது.

இளைய சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சியை மட்டுமல்லாது அவர்களது உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, உடல் நலம் ஆகியவற்றை பேண வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, **மாண்புமிகு அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும்**
**கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வருகிறது.**

தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள்,
தேசிய மற்றும் சர்வதேச அளவில் போட்டியிடும் வண்ணம் தங்கள் திறமைகளை உயர்த்திக் கொள்ள ஏதுவாக தமிழ்நாடு அரசும் பல்வேறு திட்டங்களை கொடுத்து வருகிறது.

விளையாட்டுத் துறையை மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒரு சிலவற்றை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

- இளைஞர் மற்றும் விளையாட்டு பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு இணையாக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் என்ற ஒரு ஆணையத்தை 1992ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கினார்கள்.

- 1995ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் திறம்பட நடத்தப்பட்டது. இதன் விளைவாக சென்னையில் சர்வதேச தரத்தில் **நேரு உள்விளையாட்டு அரங்கம், *மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம்*, நீச்சல் குள வளாகம், *டென்னிஸ் விளையாட்டரங்கம்*** போன்ற விளையாட்டுகளுக்கான பல்வேறு கட்டமைப்பு வசதிகள் சென்னையில் ஏற்படுத்தப்பட்டன. இந்த அரங்குகள் அனைத்தும் நவீன வசதிகளுடன் தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளன.

- காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூரில், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகம் மாண்புமிகு அம்மா அவர்களால் 2005 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. தனித்துவமான மற்றும் முதன்மையான இப்பல்கலைக் கழகத்தில் உரிய கட்டுமான வசதிகள் 16 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியால் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உலக சதுரங்கப் போட்டி தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது.

- ஒலிம்பிக், ஆசிய, காமன்வெல்த், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வெல்லும் தமிழக வீரர்கள், வீராங்கனைகளை கௌரவிக்கும் வகையில் உயரிய ஊக்கத் தொகை வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

- ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுப் போட்டிகள், பாரா ஒலிம்பிக் போட்டிகள் உள்ளிட்ட இதர விளையாட்டுகளில் பதக்கங்கள் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்களுக்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கி வருகிறது.

- விளையாட்டு வீரர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தற்பொழுது ஆண்டுதோறும் கலந்தாய்வு மூலம் நடைபெறும் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் வழங்கப்பட்டு வரும் 100 இடங்கள் ஒதுக்கீட்டினை 500 இடங்களாக உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்கள் 2012ஆம் ஆண்டில் ஆணையிட்டார்கள்.

- ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளை உருவாக்குவதற்காக **"சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகை"** (Scholorship for Elite Sports Persons) என்ற திட்டம் ஒன்றினை துவக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். இந்த திட்டத்தின்கீழ் வருடத்திற்கு ஒவ்வொரு வீரருக்கும் தலா 25 லட்சம் ரூபாய் வீதம், அதிகபட்சமாக 12 விளையாட்டு வீரர்களுக்கு வழங்கி அவர்களை தமிழ்நாடு அரசு ஊக்கப்படுத்தி வருகிறது.

- பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் விளையாட்டுகளில் அதிக அளவில் பங்கு பெறுவதை ஊக்குவிப்பதற்காக, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தியும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை 6,500 ரூபாயிலிருந்து 13,000 ரூபாயாக உயர்த்தியும் வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள்.

- தமிழ்நாட்டிலுள்ள தடகள வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில், முதலமைச்சர் கோப்பைக்காக மாநில அளவில் நடத்தப்படும் 20 வகையான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று முதல் பரிசு பெறும் வீரர்/வீராங்கனைக்கு தலா 1 லட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசு வெல்பவர்களுக்கு தலா 75,000 ரூபாயும் மற்றும் மூன்றாம் பரிசு வெல்பவர்களுக்கு தலா 25,000 ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

- கிராம அளவில் சிறப்பாக திகழும் விளையாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்னை நீங்கலாக **31** மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றுக்கு ஒரு கிராமம் வீதம் **31** கிராமங்களை தேர்ந்தெடுத்து, அக்கிராமங்களில் பிரபலமாக உள்ள விளையாட்டிற்கு ஏற்ப, விளையாட்டு மைதான வசதி ஏற்படுத்துதல், விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல், இளைஞர்களுக்கு பயிற்சி அளித்தல் ஆகியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது.

- தமிழ்நாட்டிலுள்ள பத்து கடற்கரை மாவட்டங்களில் கடற்கரை கால்பந்து, கடற்கரை கையுந்து பந்து மற்றும் கடற்கரை கபடி போட்டிகள் நடத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.
- கூடைப்பந்து மற்றும் கையுந்து பந்து விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில் திருச்சி, திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் கால்வாலியம் செயற்கை தகடுகளாக மேற்கூரை வசதியுடன் கூடிய கூடைப் பந்து மற்றும் கையுந்து பந்து விளையாட்டு மைதானங்கள் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது.

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும்
ஒவ்வொரு திறமையை இறைவன் அளித்துள்ளான்.

**சிலர் கல்வியில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.**
**சிலர் விளையாட்டில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.**
**சிலர் கலைத் துறையில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.**

எனவே, ஒவ்வொருவரிடமும் உள்ள திறமைகளை கண்டறிந்து, அவர்களிடம் உள்ள திறமையை வளர்ப்பதற்கான உரிய பயிற்சிகளை வழங்குவதே அரசின் கடமையாகும். இதன் அடிப்படையில் மாண்புமிகு அம்மாவின் அரசு கீழ்க்கண்டவற்றை செயல்படுத்தி வருகின்றது :

- உலகத் திறனாளர்களை கண்டறியும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் விளையாட்டில் அதிக திறமை

உள்ளவர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கு பெற்று வாகை சூட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

- ❖ தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்ட தலைநகரிலும், ஒரு திறந்த வெளி விளையாட்டரங்கம், ஒரு உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

- ❖ விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு தீவிர பயிற்சி அளிக்க 27 விளையாட்டு விடுதிகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

- ❖ கனோயிங் மற்றும் கயாக்கிங் எனும் நீர் விளையாட்டு உலகம் முழுவதும் பிரபலம் அடைந்துள்ளது. இது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் இடம் பெறுகிறது. இதைக் கருத்தில் கொண்டும், இறகு பந்தாட்ட போட்டிகளில் சர்வதேச அளவில் பதக்கங்கள் வெல்லக் கூடிய திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் தமிழ்நாட்டில் உள்ளதைக் கருத்தில் கொண்டும், மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக் கழக வளாகம் அருகில் கனோயிங் மற்றும் கயாக்கிங் விளையாட்டுகளுக்கு முதன்மை நிலை விளையாட்டு மையம் 2 கோடியே 58 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கவும், ஒரு இறகு பந்து அகாடமி 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கைகள் யாவும்
மாண்புமிகு அம்மாவின் அரசு
விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் மீது கொண்ட அக்கறையினை
பறைசாற்றும் விதமாக அமைந்துள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகளின் காரணமாக
உலக அளவில்,

தேசிய அளவில் மற்றும் மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் அதிக அளவில் பதக்கங்கள் பெற்றுள்ளனர். எடுத்துக்காட்டாக
திருச்சி மாவட்டம் லால்குடி அருகே
வாழத்தியூர் கிராமத்தில் பிறந்த
**திரு. ஆரோக்கிய ராஜீவ்** அவர்கள்
தன்னுடைய கடின உழைப்புடன் கூடிய
அயராத பயிற்சியால் கடந்த மாதம்
இந்தோனேஷியாவில் நடைபெற்ற
**ஆசிய விளையாட்டுப் போட்டியில் தடகளத்தில்**
**2 வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்து, தமிழ்நாடு அரசின் உயரிய ஊக்கத் தொகையானரூபாய் 60 லட்சம் பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.** இதே ஆசிய விளையாட்டுப் போட்டியில் **தமிழகத்தின் சார்பில் மொத்தம்**
**31 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள். அவர்களில் 16 விளையாட்டு வீரர்கள்,**
**5 வெள்ளிப் பதக்கம் மற்றும் 9 வெண்கலப் பதக்கங்கள் வென்று சாதனை படைத்தார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.**

இதன்மூலம் இந்தியாவிலேயே, **ஆசிய**
**விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்றவர்களின் பட்டியலில் மூன்றாமிடத்தை**
**பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.** இவர்களை பாராட்டி ஊக்குவிக்கின்ற விதமாக, பதக்கம் வென்றவர்களுக்கும், அவர்களது பயிற்சியாளர்களுக்கும் மாண்புமிகு அம்மாவின்அரசு **மொத்தம் 5 கோடியே 98 லட்சம் ரூபாய்**
உயரிய ஊக்கத் தொகையாக வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, ஆஸ்திரேலியாவின்
**கோல்டு கோஸ்ட்** நகரில் நடைபெற்ற
21வது காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில்
பதக்கங்கள் வென்ற 7 விளையாட்டு வீரர்களுக்கும்,
அவர்களது பயிற்சியாளர்களுக்கும் சேர்த்து
**மொத்தம் 4 கோடியே 83 லட்சம் ரூபாய்**
**உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ள.**

அகில இந்திய பள்ளிக் குழுமத்தின் சார்பாக
14 வயதிற்குட்பட்டோரர், 17 வயதிற்குட்பட்டோர் மற்றும்

19 வயதிற்குட்பட்டோர் ஆகிய மூன்று பிரிவுகளில் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள்
பல்வேறு விளையாட்டுகளுக்கு நடத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், முதன்முறையாக பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தி, அவர்கள் உலகளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைப்பதற்கு ஏதுவாக, இவ்விளையாட்டுப் போட்டிகளில் **தமிழகத்தின் சார்பாக கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூபாய் 2 லட்சமும், வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூபாய் 1.50 லட்சமும், வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூபாய் 1 லட்சமும் வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு ஆணையிட்டது.**

இதன்படி, 2017–18ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய பள்ளிக் குழும விளையாட்டுப் போட்டிகளில், பல்வேறு போட்டிகளில், தமிழகத்தின் சார்பாக கலந்து கொண்டு பதக்கங்கள் வென்ற 465 மாணவ, மாணவியருக்கு ரூபாய் 8 கோடியே 21 லட்சத்து
50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை
ஊக்கத் தொகையாக இவ்விழாவில் வழங்கியதில்
நான் பெருமை கொள்கிறேன் என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2017 ஆம் ஆண்டு தமிழ்நாட்டை சேர்ந்த
3 விளையாட்டு வீரர்களுக்கு
அர்ஜுனா விருது வழங்கப்பட்டுள்ளது.**

2018ஆம் ஆண்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த
மேசைப் பந்து விளையாட்டு வீரர்
**திரு. சத்தியனுக்கு அர்ஜுனா விருதும்,
பயிற்சியாளர் திரு. சீனிவாச ராவ் அவர்களுக்கு
துரோணாச்சாரியார் விருதும்** வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறையில் நல்ல வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இங்கே விரிவாக எடுத்துக் கூறினேன். விளையாட்டுத் துறையில் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை உருவாக்குவதற்கு அரசு என்னதான் பெரிய அளவில் திட்டங்களை செயல்படுத்தினாலும், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியிடங்கள் நிரப்புவதில் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற குறைபாடு அவர்களிடமும், அவர்களது குடும்பத்தினரிடமும் நிலவுகிறது.

**“மக்கள் நம் பக்கம் இருக்கிறார்களா என்பதை விட மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பதே என்னுடைய சிந்தனையாக இருக்கிறது. என்னை நம்புகின்ற மக்களுக்கு என்ன என்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோஅந்த வழிகளைப் பற்றி நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்”**

**என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையை செயல்படுத்தும் மாண்புமிகு அம்மாவின் அரசு, விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில்
**தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில்,** குறிப்பிட்ட பதவிகளில் தகுதியின் அடிப்படையில் 2% வரை உள் ஒதுக்கீடாக விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று எனது சுதந்திர தின உரையில் அறிவித்து, அதனை செயல்படுத்த உரிய நடவடிக்கைகளை
எடுத்து வருகிறது.

இதன் முதல் கட்டமாக, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்குழு விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வகுத்து, இந்த உள் ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தும்.
இந்த அறிவிப்பு அதிக அளவில் இளைஞர்களை விளையாட்டுத் துறையில் ஈடுபடச் செய்ய வழிவகை செய்யும் என்று சொன்னால் அது மிகையாகாது.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள அரசு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள விளையாட்டு மைதானங்களில் கபடி மற்றும் வாலிபால் போன்ற விளையாட்டுகள் பள்ளிக் கல்வித் துறை மற்றும் உயர்கல்வித் துறை மூலமாக செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் தமிழ்நாட்டை சேர்ந்த இளைஞர்கள் சர்வதேச, தேசிய மற்றும் மாநில அளவில் நடக்கும் போட்டிகளில் அதிக அளவில் பங்கு பெறுவார்கள் என நம்புகிறேன். அது மட்டுமன்றி,
விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளின் குடும்பத்தாருடைய முழு ஒத்துழைப்பும்,
ஈடுபாடும் இவர்களுக்குக் கிடைக்கும்
என நான் உறுதியாக நம்புகிறேன்.

விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறும் ஒவ்வொருக்கும் அவரது இலக்கினை அடைவதற்காக சில  நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும்.  அவை

Specific, Measurable, Achievable, Realistic and Time Bound.
இது SMART என்று சுருக்கமாக அழைக்கப்படும்.

இதைக் கூறும்போது எனக்கு ஒரு நிகழ்வு
நினைவுக்கு வருகிறது.

ஃப்ளோரன்ஸ்  சாட்விக் ஜுலை 4, 1952இல்
அமெரிக்காவில் உள்ள கேடலினா கால்வாயை
நீந்திக் கடந்த முதல் பெண்மணி என்ற பெருமையை அடைவதற்கு போராடிக் கொண்டிருந்தார்.
அவர் ஏற்கனவே இங்கிலிஷ் கால்வாயை கடந்து
வெற்றி கண்டவர். உலகே அதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தது.
சாட்விக் அடர்ந்த மூடுபனியையும், ரத்தத்தை உறைய வைக்கும் குளிரையும், பல சமயங்களில் சுறா மீன்களையும் எதிர்த்துப் போராடினார்.

அவர் கரையை அடைய பெரு முயற்சி செய்தாலும் ஒவ்வொரு முறையும் தனது மூக்குக் கண்ணாடி மூலம் பார்த்தது என்னவோ மூடு பனியைத்தான்.
கரையை பார்க்க முடியாததால் தனது முயற்சியை கைவிட்டார்.   அவர்,
**“நான் நொண்டிச் சாக்கு சொல்ல விரும்ப வில்லை.**
**நான் கரையை மட்டும் பார்த்திருந்தால்**
**வெற்றி இலக்கை அடைந்திருப்பேன்”**
என்று கூறினார்.

கரைக்கு வெறும் அரை மைல் தொலைவிலேயே
தான் இருந்தததை அறிந்ததும்
சாட்விக் மனம் வெறுத்துப் போனார்.
அவரால் நீந்த முடியாமல் அவர் முயற்சியை கைவிடவில்லை.  அவரது இலக்கு எட்டக் கூடிய தூரத்தில் எங்கும் தெரியாததாலேயே கைவிட்டார்.
மற்ற எதுவும் அவரைத் தடுக்கவில்லை.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அவர் மீண்டும்
திரும்பிச் சென்று கேடலினா கால்வாயை நீந்திக் கடந்தார்.    இம்முறை, மோசமான வானிலை இருந்தாலும்கூட,  தனது மனதில் இலக்கை அவர் நினைவு வைத்திருந்ததால், அதனை அடைந்தது மட்டுமல்லாமல் இரண்டு மணிநேரம் முன்னதாகவே கடந்து ஆண்களின் சாதனையை முறியடித்து விட்டார்.

எனவே, இளைஞர்கள் முதலில் இலக்கை தெளிவாக நிர்ணயித்துக் கொண்டு, வெற்றி பெறும் வரை அதனை நோக்கி பயணிக்க வேண்டும்.

**விளையாட்டு என்றால் அது இளைஞர் நலனையே சார்ந்திருக்கும். விளையாட்டினால் இளைஞர்கள் நலன் பெறலாம். இளைஞர்களினால் விளையாட்டு மேம்பாடு அடையும். விளையாட்டும், இளைஞர் நலனும் ஒன்றுக்கு ஒன்று பின்னிப் பிணைந்தவை.**

இளைஞர்கள் மீது அதிக நம்பிக்கை வைத்த ஏவுகணை நாயகன் மறைந்த பாரத குடியரசுத் தலைவர் மாண்புமிகு டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த நாடாக மாற வேண்டும் என்று விரும்பினார்.

**"புதிய எண்ணங்களை உருவாக்கும்**
**உள்ளத்து உறுதி இன்று என்னிடம் மலர்ந்துள்ளது. எனக்கென்று ஒரு புதிய பாதையை உருவாக்கி**
**அதில் பயணம் செய்வேன். முடியாது என்று**
**எல்லோரும் சொல்வதை, என்னால் முடியும்**
**என்று கூறும் மன உறுதி என்னிடம்**
**உருவாகி விட்டது. புதிய விஞ்ஞான**
**கண்டுபிடிப்புகளை செய்ய முடியும்**
**என்ற உறுதி, என்னிடம் என்றைக்கும்**
**கொந்தளிக்கிறது. மன உறுதி**
**இளம் சமுதாயத்தின் அஸ்திவாரம்.**
**இந்த நாட்டின் இளைய சமுதாயத்தின்**
**உறுப்பினரான நான் என் கடின உழைப்பாலும்,**
**உள்ளத்து உறுதியாலும் தோல்வியை**
**தோல்வியடையச் செய்து வெற்றி பெற்று**
**என் நாட்டை வளமான நாடாக்குவேன்**
**என உறுதி ஏற்றுக் கொள்கிறேன்."**

என்று இளைஞர்களுக்கு அவர் கூறிய அறிவுரையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2020க்குள் இந்தியா வளர்ந்த நாடாக மாற வேண்டும் என்ற லட்சியத்தை நாம் அடைய வேண்டுமானால் நம்நாட்டு இளைஞர் சமுதாயத்தின் பங்களிப்புடன்தான் இது சாத்தியமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார். அனைத்து துறைகளிலும் நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல அறிவார்ந்த இளைஞர்களை தயார்படுத்துவதில் தமிழ்நாடு தனது உரிய பங்கினை அளிக்கும் என்று இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

இளைஞர்களின் ஒட்டு மொத்த நல்வாழ்வு மற்றும் ஆளுமைத் தன்மைக்கு உதவும் திட்டங்களை செயல்படுத்தவும், கண்காணிக்கும் விதமாகவும் இளைஞர் நல இயக்ககம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இயக்குநகரத்தின் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய மற்றும் மாநில வளர்ச்சித் திட்டங்களில் இளைஞர்கள் தங்களை இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும்.

சமூக நலத்திற்காக பாடுபடும் இளைஞர்களின் சேவையை அங்கீகரிக்கும் பொருட்டு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று **3** ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த விருதினை பெறுகின்ற வகையில் ஒவ்வொரு இளைஞர்களும் சமூகப் பணி ஆற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

நற்பண்பு, நட்புடமை, ஒழுக்கம், தலைமை பண்பு, சமய சார்பின்மை, துணிவு, செயலாற்றல் மற்றும் உன்னதமான தன்னலமற்ற சேவை மனப்பான்மையை இளைஞர்களிடம் வளர்ப்பதற்காக பள்ளி மற்றும் கல்லூரிகளில் தேசிய மாணவர் படை அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணாக்கர்கள் அதிக அளவில் இந்த தேசிய மாணவர் படையில் சேர்ந்து நாட்டுப் பணியாற்ற முன்வர வேண்டும்

“Not Me But you” என்ற குறிக்கோளுடன் தொடங்கப்பட்ட நாட்டுப் நலப் பணித் திட்டத்தில் இளைஞர்கள் அதிக அளவில் பங்கேற்று நாட்டு நலப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

நிலத்தடி நீரை அதிகரிக்கச் செய்ய மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட திட்டம்தான் மழைநீர் சேகரிப்புத் திட்டம். இந்தத் திட்டத்தால் ஏற்படும் பயன்கள் குறித்தும், இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவது குறித்தும் இளைஞர்கள் முன்னுதாரணமாக தங்கள் வீடுகளில் செயல்படுத்துவதோடு மட்டுமின்றி,
தாங்கள் வாழும் பகுதியில் உள்ள மக்களிடம் எடுத்துரைத்து, இந்த திட்டம் மேலும் பரவலாக்கப்பட உதவ வேண்டும்.

கிராமங்களில் உள்ள இளைஞர்கள் அங்குள்ள மக்களிடம் ஒவ்வொரு வீட்டிலும் கழிவறை இருக்க வேண்டியதன் அவசியத்தையும், அதன் பயன்களையும் எடுத்துரைத்து, தங்கள் வீட்டில் கழிவறையைக் கட்டி, ஒவ்வொரு இல்லத்திலும் கழிவறை இருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அது மட்டுமன்றி, மழைக்காலங்களில் ஆங்காங்கே தேங்கும் நல்ல நீரில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலம் டெங்கு பரவுகிறது. இதற்கான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்திடவும், தன்னார்வம் மிக்க

இளைஞர்களைக் கொண்டு, இதற்கான பணிகளை செய்திடவும் இளைஞர்கள் உதவ வேண்டும்.

வருகின்ற 2019 ஜனவரி 1 ஆம் தேதி முதல் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாடு முழுவதுமாக தடை செய்யப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் இல்லாத தமிழ்நாட்டை நமது எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம் என நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் நான் அறிவித்து இருந்தேன்.
இந்த திட்டம் முழுமையாக வெற்றி பெறுவது நமது இளைஞர்கள் கையில்தான் உள்ளது. இளைஞர்களாகிய நீங்கள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

எதிர்கால இந்தியாவை வழிநடத்துபவர்களான நீங்கள் முன்உதாரணமாக பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும். இதைப் பார்த்து மற்றவர்களும் பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தவிர்ப்பார்கள். இதன் மூலம் பிளாஸ்டிக் இல்லாத தமிழகம் உருவாக வழிவகை ஏற்படும்.

பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் தங்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினியை பயன்படுத்தி தங்களது தொழில்நுட்பத் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.
கணினியின் மூலம் உபயோகமான விவரங்களை கண்டறிந்து அதனை மக்கள் நலனுக்காக பயன்படுத்த வேண்டும்.

இளைஞர்களாகிய நீங்கள் சிலரின் தீய எண்ணங்களுக்கு இடம் கொடுத்து தவறான பாதையில் செல்லாமல், நான் கூறிய பல்வேறு பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டால், நாட்டின் நலனில் அக்கறையுள்ள ஒரு நல்ல குடிமகனாக உங்களை உயர்த்திக் கொள்வதற்கு வழிவகை ஏற்படும்.

**விளையாட்டு வீரர்களே! வீராங்கனைகளே**
**மற்றும் இளைஞர் பெருமக்களே !**

**நீங்கள் வெற்றி பெற விளையாடுங்கள் –**

**தோல்வியை தவிர்க்க அல்ல.**

**தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்**

**நீண்ட கால திட்டங்களைப் பற்றி எப்போதும் சிந்தியுங்கள்.**

**உங்கள் பலத்தை மதிப்பீடு செய்து அதன்படியே திட்டமிடுங்கள்.**

**ஒரு பரந்த, தொலைநோக்கு கண்ணோட்டத்துடனேயே முடிவெடுங்கள்.**

**உங்களது நேர்மையை ஒரு போதும் விட்டுக்**

**கொடுத்து விடாதீர்கள் என்று கூறி,**

**இங்கே பேசியவர்கள் பல கோரிக்கைகளை வைத்தார்கள். அதை பரிசீலித்து ஒரு கோரிக்கையை நான் இந்த நேரத்திலே அறிவிக்க விரும்புகின்றேன். ஏற்கனவே, தற்போது வேலைவாய்ப்பிலே உள்ள 2 சதவீதமான உள்ஒதுக்கீடு 3 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.** எனக்கு முன்னே பேசிய பல்வேறு சங்கத்தினுடைய நிர்வாகிகள், பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகள் விளையாடினால் என்ன நன்மை கிடைக்கும் என்று கேட்கின்றார்கள் என்று சொன்னார்கள். ஏற்கனவே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினிடத்திலே இந்த சங்கத்தினுடைய நிர்வாகிகள், மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் பாலகிருஷ்ணரெட்டி அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். விளையாட்டை தமிழகத்திலே ஊக்குவிக்கின்ற விதமாக இன்றைக்கு அரசின் சார்பாக 2 சதவீத உள்ஒதுக்கீட்டை நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டார், அதை அறிவித்தோம். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற **இந்த நிகழ்ச்சியிலே, பல்வேறு சங்கத்தினுடைய நிர்வாகிகளும், விளையாட்டுத் துறை அமைச்சரும் வேண்டுகோள் வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று அந்த 2 சதவீதத்தை 3 சதவீதமாக உயர்த்தி வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.**

ஒவ்வொருவரும் இளைஞர் பருவத்திலே விளையாடுவது அவசியம். விளையாட்டில் கலந்து கொண்டு விளையாடுகின்றபொழுது கிடைக்கின்ற மகிழ்ச்சி எந்த விதத்திலும் குறைவானது அல்ல. மற்ற பதவிகளில் வகிக்கின்ற மகிழ்ச்சியை விட விளையாடுகின்றபொழுது கிடைக்கின்ற மகிழ்ச்சிதான் சிறந்த மகிழ்ச்சியென்று இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். ஒவ்வொருவரும் விளையாட்டுப் போட்டிகளிலே கலந்துகொண்டு விளையாடுகின்றபொழுது மனம் ஒருமைப்படும், அப்பொழுது அந்த விளையாட்டுதான் நமக்கு கண்ணுக்குத் தெரியும், எதுவுமே ஞாபகத்திற்கு வராது. ஆகவே, அப்படி, அந்த விளையாட்டை மேலும் தமிழகத்திலே ஊக்குவித்து எனக்கு முன்னாலே விளையாட்டுத் துறை அமைச்சர் அருமை சகோதரர் பாலகிருஷ்ணரெட்டி அவர்கள் இங்கே தெரிவித்தார். இந்தியாவிலேயே, சர்வதேச அளவிலே நம்முடைய விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள் பல்வேறு போட்டியிலே கலந்து கொண்டு தங்கம் வென்றார்கள். **8**வது இடத்திலிருந்து இப்பொழுது **3**வது இடத்திற்கு நாம் முன்னேறி இருக்கின்றோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு இந்த விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு வகையிலே உதவி செய்து, 3வது இடத்திலிருந்து முதல் இடத்திலே வருவதற்கு உங்களுக்கு அனைத்து வகையிலும் உதவி செய்யும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த பாராட்டு விழாவிற்கான சிறப்பான ஏற்பாடுகள் செய்த அனைத்து அமைப்புகளுக்கும் நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**